# சிறு குரல்

ஒரு வாரம் பூரா அகத்திற்குக் கடிதம் எதுவுமே வரவில்லை. அடுத்து 'கவர்' வந்ததும், காணாது கண்ட உவகையுடன் அவசரமாக ஓரங்கிழித்தேன். அதன் விளிம்பில் ஊதிக் கவிழ்தேன். டக்கென்று மேஜைமேலே விழுந்தது காசு; ஒரு சாயிபாபா காசு!

வியந்தபடி, கவருக்குள்ளிருந்த கடிதத்தை உருவி எடுத்தேன். கோமதி பேசுகிறாள் என்னுடன்:

'இந்தக் காசு வியாழக்கிழமை உன் கைக்கு எட்டும்படியாக அனுப்ப வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் தபால் இலாகாவை நம்புவதற்கில்லை. ஒரு நாள் முன்னே பின்னே ஆனாலும் ஆகிவிடும். நானே இதை வியாழக்கிழமையாகப் பார்த்து அனுப்பிவிட்டேன். இன்று காலையில் பூஜையிலிருந்து எடுத்தேன். நாங்கள் சீரடி போய் வந்த விவரமெல்லாம் என் கணவரே அண்ணாவுக்கு எழுதுவார்!'

இன்றும் சில சில்லரை சமாசாரங்களும் வழக்கம்போல எழுதியிருந்தாள் என் நாத்தனார். என் கவனம் அந்தக் காசுமேல். நன்றாகப் பார்த்தேன். காசுக்கு ஒருபுறம் சாயிபாபாவின் உருவம். மறுபுறம் கஜலட்சமி, வெள்ளிக் காசுபோல பளிச்சென்ற தோற்றம். மாங்கலியச் சரட்டிலே அணிவதற்கு வசதியாக ஒரு குந்து வைக்கப்பட்டிருந்தது. 'அணியட்டுமா?' என்று சற்று யோசித்தேன். ஏனென்றால் எனக்கு அப்படியொன்றும் பக்தியோ பற்றோ கிடையாது சாயிபாபாவிடம். அவர் ஒரு மகானாக இருந்திருப்பார் என்ற எண்ணம் தவிர வேறொன்றுமில்லை. ஆனால் இப்பொழுது காசை ஒதுக்கி வைக்கத் தோன்றவில்லை. 'சரியாய் இன்றைக்கு வியாழன் பார்த்து வந்திருக்கிறதே!" என்று ஆச்சரியம் எனக்கு - இடையில் சில நாள் ரயில், தபால் போக்குவரத்து தடைப்பட்டதனால், திங்கட்கிழமை வந்திருக்க வேண்டிய தபால் வியாழக்கிழமை வந்திருக்கிறது!

'நீ இதை அணிந்துகொள்' என்று கோமதி சொல்லவே இல்லை. எனினும் சிறிய குரல் ஒன்று அப்படிச் சொல்வது போன்று தோன்றிற்று.

தாலிச் சரட்டைத் தோள்புறப் புடவைமீது கிடத்தியவாறு முடிச்சை அவிழ்க்க முற்பட்டேன். என் கை பின் வாங்கியது. எதிரே கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஒன்றுதான் - அரை மணிக்குள் அணிந்துகொண்டுவிடலாம் - ராகு காலத்திற்கு முன்பு....

ராகு காலத்தின் நினைவுடன் என் சிந்தனை ஒடிந்து வேறாகிவிட்டது. அப்படியே கடிதம், கவர், காசு அனைத்தையும் விட்டுவிட்டு, உடல், உயிர், உள்ளம் மூன்றுமே கழன்று கொண்ட மாதிரி ஒரு வெற்று உணர்வுடன் சோர்ந்து சாய்ந்தேன்.

'வியாழக்கிழமை' என்றாலே அச்சமும் ஆத்திரமும் தோன்றிவிடும்படி என் கண்ணான குழந்தை இதே கிழமையில் இறந்துபோயிற்று. ராகுகாலத்தில் அதன் சடலத்தைக் கொண்டு போகக் கூடாது என்று விறைக்கப் போட்டிருந்தார்களே, அந்தக் கண்றாவி மறக்குமா எனக்கு? நாலே நாள் காய்ச்சல். "இது வராதா மனித தேகத்திற்கு?" என்று தெம்புடனிருந்தோம் ஓரிரண்டு நாள். எச்சரிக்கையாயிருந்தோம். அப்புறம் இரண்டு நாள். பயனில்லை. ஏமாந்தோம். இந்தக் கசப்பு மறக்குமா?

ஆனால், என் மனசுக்குள்ளே ஏதோ ஒன்று குரல் எழுப்பி, 'மறக்கிறாயே! மறந்துகொண்டேயிருக்கிறாயே! மறக்க வேண்டியதுதானே! என்று என்னை வினைவுகிறது. "எப்படிப் பிரிந்திருப்பேன்!" என்று அழுத நாளெல்லாம் போய், "நானே என் அருமைக் குழந்தையை மெல்ல மெல்ல மறந்து வருகிறேனே!" என்று என் கண்கள் கலங்குகின்றன. எங்கள் அருமந்தப் புதல்வியாக சொற்ப காலம் விளையாடி ஓடி மறைந்த குழந்தையை நினைத்துப் போற்றுவதில் ஆறுதல் இருக்கத்தானிருக்கிறது. ஆனால்?

சட்டென எழுந்தேன். அடுத்த சில நிமிஷங்களுக்குள், அந்த சாயிக் காசு என்னுடைய மங்கலச்சரட்டில் பொற்குமிழ்களுடன் விளையாடிக்கொண்டிருந்தது.

இந்த மனசு அடிக்கும் கூத்து எல்லாம்! எதையோ நினைக்கும்; எதையோ சொல்லும்; எதையோ செய்யும். சில சமயம் அது செய்கிற குளறுபடியில் எல்லாம் தசவிதப் பொருத்தம்போல அமையும். பல சமயம் ஷஷ்டாஷ்டகம்தான்!

கொஞ்ச நேரத்திற்குள் நான் என் இயற்கைப்படி கமலியாகத் தெளிந்துவிட்டேன். மதலையைப் பறிகொடுத்த தாயாக இல்லை. கோமதியைப் பற்றி ஆராயும் மதனியாக ஆனேன்.

கோமதிக்குத்தான் சாயிபர்பா பக்தி. அவளுக்குத்தான் சாயிபாபாவின் சக்தியில் ரொம்ப நம்பிக்கை. "ஸ்ரீ சாயிதான் தெய்வம் எனக்கு. நானிருக்க பயமேன்?" என்று அவர் அபயம் அளிக்கிற அருள் போதும். நான் அவரை நம்பிவிட்டேன்", என கோமதி அடிக்கடி தன் கருத்தை வெளியிட்டதுண்டு. நானும், பல தடவை சும்மா கேட்டுக்கொண்டிருந்த பிறகு, ஒரே ஒரு தடவை என் மனசையும் வெளிப்படுத்தினேன்! "எனக்கென்னவோ இராமர், சிவன், கிருஷ்ணர் என்றால்தான் கடவுள் என்று தோன்றுகிறது" என்று சொன்னேன். மனத்தாங்கல்தான் கோமதிக்கு. முகத்தை வற்றலாக்கிக்கொண்டு, "வியாழக்கிழமை ராத்திரி நான் உப்புப்பண்டம் சாப்பிடாமல் ஹல்வாயாய் விழுங்குகிறேன். கேசரியாய்த் திணிக்கிறேன் என்றுதான் அண்ணாகூட கேலி செய்கிறானே!" என பதலிறுத்தாள்!

அவளுடைய அண்ணா - இவர் இருக்கிறாரே - அகல் விளக்குப் பந்தியில் ஒரு மெழுகுவர்த்தி, சில விஷயங்களில் எனக்கு நேர் எதிரிடை, இன்னமும் பழகுகிறேன், பழகுகிறேன், அவர் சுபாவம் தெரியமாட்டேனென்கிறது. அவருக்குச் சாயிபாபாவிடம் பக்தி உண்டா இல்லையா என்று சொல்லத் தெரியாது எனக்கு. பக்தியாய் அவர் நாமம் சொல்லியிருப்பாரா? குறும்பாய் எதையாவது சொன்னால் அதன் சம்பந்தப்பட்ட முக்கிய விஷயமும் அதே ஒலி பெறுகிறது. "விசாலக்கிழமை" என்று யாரோ சொன்னான் என்று இவர் வியாழக்கிழமையைப் பற்றி சொல்லப் போக, "அண்ணா என் சாயி பக்தியை நகையாடுகிறானோ?" என்று வருத்தமுண்டாகிவிட்டது கோமதிக்கு, எனக்கும் திகைப்புத்தான் - எப்போது? முதன் முதல் உத்தியோகம் தொடங்கி முதற் சம்பளம் வந்தபோது அதில் பாதித் தொகையை சாயிபாபாவுக்குக் காணிக்கை செலுத்தினாரே, அப்பொழுது.

*** ** **

மாலையில் வீடு மீண்ட கணவர், தம் தங்கையின் கடிதத்தைப் பார்த்தாரே - ஒரு வார்த்தை, "எங்கே காசு? கொண்டா, பார்க்கிறேன்" என்று கேட்கவில்லை. 'எடுத்து வைத்திருப்பாள் என்று எண்ணம். "அணிந்திருக்கிறேன்" என்று நான் கோமதிக்கு அறிவித்த கடிதத்தை அவர் படித்தார். "அப்படியா?" என்று மூச்சுவிடவில்லை! அணிந்திருக்கிறேன் என்று என்னை அறிந்து கொண்டதோடே சரி. நாத்தனார் அனுப்பினாள் என்ற மரியாதை வைத்தேனே என உள்ளூற திருப்திபட்டிருப்பார்.

நான் ஓரிரண்டு தடவைகள் பேச்சுவாக்கில் காசு ஓசை எழுப்பினேன், தலையா பூவா என்று பார்க்கிற மாதிரி! "நீங்கள் பூணூலில் போட்டுக்கொண்டிருப்பீர்களோ என்னமோ; நான் அவசரப்பட்டுவிட்டேன்," என்றேன். "எனக்கு சாயிபாபா காசில் இருக்கும் லக்ஷ்மியைப் பற்றி ரொம்ப திருப்தி உண்டாகிறது!" என்று கூட சொல்லிப் பார்த்தேன். எதையும் மறுக்காத பாவனையில் மழுப்பினதுதான் அவர் அளித்த மறுமொழி. சாயிபாபாக்காசு அனுப்பினதனால் கோமதி எனக்கு சாயிபக்தியை உண்டாக்கிவிடவில்லை என்பதை வெளியிட்டுக்கொண்ட அற்ப சந்தோஷியானேன், நான்.

*** ** **

அந்தக் காசுக்கு வெள்ளி நிறம் மங்கி மாறிவிட்டது. கழற்றிவிட்டேன். கழற்றினதை ஒரு துண்டுத் துக்கடாப் பெட்டியில் போட்டேன். "ஓ, இன்றைக்கும் கிழமை வியாழன்!" என்பது

ரொம்ப நேரங் கழித்துதான் நினைவு வந்தது! "கொஞ்ச நாள் அணிந்தோம் போதும்", என்று சமாதனப்படுத்திக் கொண்டேன். பிறகு, "வியாழனன்று அணிந்ததைப்போலவே கழற்றினதுதான் ரொம்பப் பொருத்தம்" என்று கூட முடிவு கட்டினேன். ஆனால் நீடிக்கவில்லை அது. எண்ணெயில் ஊறிய திரி என்றாலும், திரியைச் சுற்றி எண்ணெய் இல்லை என்றால் எத்தனை நேரம் ஒளிரும்?

இரவுச் சாப்பாடு கணவருக்குப் படைத்துவிட்டு நான் சாப்பிட அமர்ந்தேன். வாசலில், கல்யாணம் சொல்லி அழைக்க தெரிந்த பேர் வந்தார்கள். இப்பால் வந்தேன். கல்யாணம் என்றால் ஆவலாய் விசாரிக்க எத்தனை விஷயம் இல்லை? பேசி அனுப்பிவிட்டு உள்ளே திரும்பினேன். இரண்டு பூனைக்குட்டிகள், சமையலறையிலே. ஒரு குட்டி மோரை மொக்கிக் குடித்துவிட்டுச் சப்புக் கொட்டுகிறது. மற்றது வெறுஞ் சாதத்தைத் தின்கிறது.

"போகட்டும் போ; உபவாசமிருந்தால் நல்லதுதான்". என்றேன் நான்.

"உபவாசமா இன்றைக்கு?" என்று சிரித்தார் இவர் இடக்காக

"பட்டினி என்றா சொல்லிக்கொள்கிறேன்? சாயங்காலம் தின்ற ஜீராப்பூரியே நெஞ்சிலிருக்கு. இப்போது இந்தச் சாப்பாடு இல்லாவிட்டால் மோசமில்லை என்பதற்குச் சொன்னேன்" என்று பதில் விடுத்தேன்.

சற்றுப் பொறுத்து அவர், "இன்னிக்கு உனக்கு சாயிபாபா விரதம் ஆகிவிட்டது போலிருக்கு. தித்திப்பு மட்டும் தானே தின்றாய் மாலையில்?" என்று கேட்கவும், நான் அயர்ந்துவிட்டேன் என்றே சொல்ல வேண்டும்.

உடனே சென்று கழிசடைப் பெட்டியிலிருந்த சாயிகாசை எடுத்தேன் கொண்டுபோய் பூஜை மணையில் கங்கைச் செம்பின் மேல் வைத்தேன்.

எதைப் பற்றியும் தீவிரமாய் நினைக்காதவர் என்று அவரைச் சொல்லலாம். நான் அப்படியில்லை.

*** ** **

ஓர் விஷயம் அடிக்கடி என் சிந்தனையில் வந்தது. "ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைக் குறிப்பவர்தான் சாயிபாபா" என்று யாரோ சொல்லக் கேட்டிருந்தேன். சாயிபாபா பிறவியில் முஸ்லீம்.

அதைப்பற்றி மீண்டும் நினைத்துப் பார்த்தபோது எனக்கு ஒரு மாதிரியாகத்தானிருந்தது. ஒற்றுமை! உடனொத்த பெண்கள்தாம், கோமதியும் இந்தக் கமலியும். ஆனால் ஒற்றுமை? - சுபாவப்படி எத்தனையோ வேற்றுமைகள் இருக்கலாம். இருக்கட்டும். உப்பும் புளிப்பும் கலந்தால் ருசிக்கவில்லையா? இனிப்பு என்று சொல்லக்கூடியபடி சுவையுண்டாகாதா?

ஒருத்திக்கு ஒரு வீடு பிறந்தகம். அதில் ராணிபோல உலவினாள். அதே வீடு, அதே சமயத்தில் மற்றவளுக்குப் புக்ககம். சேவகம் செய்தாள், சேடியாக. இருவருமே அன்பினாலும் உள்ளத்தாலும் ஒற்றுமைப்பட்டிருக்கலாம். அதிகாரமே ஆதரவாகவும், சேவகம் தோழமையாகவும் மணத்திருக்கும். அப்படி நடக்கவில்லை.

இப்பொழுது கோமதியும் சரி, நானும் சரி, மாறிவிட்டோம். அடக்குவதும், அடங்குவதும் இனியல்ல என்பதை உணர்ந்துவிட்டோம்.

இல்லாவிட்டால் இந்தக் கமலி ஒரே குதூகலமாகப் புறப்படுவேனா, கோமதி வீட்டிற்கு! புலி வாழ் குகையினுள் புகுவதைப் போல கோமதியின் சன்னிதானத்தை வெருவியே நாள் போய், பழக்கப்பட்ட விலங்குடன் விளையாடப் போகிற மாதிரி என் மனதில் தன்னம்பிக்கை. இவருக்கு விடுமுறை சமயம், வருந்தி வருந்திக் கூப்பிட்டு கோமதிகூட அலுத்துவிட்டாள். குஷியாக இருவரும் போய்ச் சேர்ந்தோம்.

அந்தக் காசு அனுப்பினதைப் பற்றி கோமதி பிரமாதமாகக் சொல்லமாட்டாள். ஆனால் நான் அதைப்பற்றி ஏதாவது சொல்லுவேன் என எதிர்பார்க்கக் கூடும். சொன்னால் போச்சு என்ற எண்ணமிட்டவாறு வேறு ஏதோ பேசினேன், நிறைய.

அப்பொழுது மருமான் ரவி, கையில் ஒரு புகைப்படத் தொகுப்புடன் வந்து, என் அருகே அமர விரும்புகிறவனாய், "மாமீ, எங்காத்து கொலு போட்டோ பார்த்தேளா மாமீ?' என்று காண்பித்தான். இன்னும் மற்ற படங்களையும் பார்த்தேன். "நீங்கள் எல்லோருமாக இருக்கிற போட்டோவிடன் பிரதி ஒன்று எனக்கு அனுப்பக்கூடாதா; எங்களிடம் உங்கள் குடும்ப போட்டோ இருக்க வேண்டாமா?" என்று நான் கோமதியை வினவிக் கொண்டிருக்கையிலே, மருமான் ரவி என்னைத்தொட்டு, "சாய் பாபா காசு பத்திரமாயிருக்கோ, மாமீ?" என்று என்னை விளித்தான். "ஓ, பூஜையில் வைத்திருக்கிறேனே!" என்றேன். "நானும் ரொம்பப் பத்திரமா வச்சிருந்தேன்; ஆனா எப்படியோ தொலஞ்சுடுத்து மாமி. ஆனா, பரவாயில்லை; நான்தான் சாயிநாத்!" என்று சிரித்தான் சிறுவன்.

அவன் பேசுகிற அழகை ரசித்தபடி நானும் ஒலி எழுப்பிச் சிரித்தேன்.

"பள்ளிக்கூடத்தில் இவன் பெயர் சாயிநாத் என்று கொடுத்திருக்கிறோம். இவனுக்கு வைத்த மூன்றாம் பெயர் அதுதானே?" என்று எனக்கு நினைவுறுத்தினாள் கோமதி. இந்தப் பிள்ளையின் பேறு காலத்தில் பிறந்தகம் வந்திருந்தாள், அப்புறமும் ஓரிரண்டு தடவைகள் வந்தாள், ரவி என்றுதான் அழைத்தாள் பிள்ளையை. "சாயிநாமம் வேண்டுமென்று மூன்றாவது பெயராக அதையும் இட்டீர்களே, அது என்னாச்சு?" என்று கேட்கவே எனக்கு நினைவு இருந்ததில்லை.

"பெயர் மாற்றினால் குழந்தைகள் திண்டாடும். ஆஜர் சொல்ல மறந்து ஆப்ஸெண்டாக விடப்போகிறான்!' என்றேன்.

"ஐயோடி, இவனா? சாயிநாத்னுதான் நான் கூப்பிடணுமென்று அடம்பிடித்து என்னைத் திண்டாடவைக்கிறான். அடேயப்பா, என்னமாய் என்னை நச்சிப்பிடுங்கிவிட்டான்! சாயிபாபாகாசு ஒரு டஜன் வாங்கினோம், ஆத்திற்கு நான்கு. இன்னும் ஒரு நாலு ஊருக்கு அனுப்பினேன். அடுத்த வீட்டுக்கு இரண்டு. எதிர்வீட்டுக் குழந்தைக்கு அரையில் கட்ட ஒன்று தந்தேன். ஒன்று மிச்சம். இருக்கட்டும் என்று வைத்திருந்தேன். இவன்தான் மாமிக்கு அனுப்பூ, அனுப்பூன்னு என்னைத் தொணப்பிவிட்டான்".

சாயிபக்தி இல்லாதவளுக்கு அனுப்ப வேண்டாம் என்று கோமதி நினைந்திருக்கிறாள்; நியாயந்தான்.

ஆனால் ரவியென்னும் இந்த சாயிநாத் அம்மாவை சும்மாவிடவில்லை. 'மாமிக்கு அனுப்பூ, அனுப்பூ...'

ஆதுரமாகப் பார்த்தேன். அத்தனை பேச்சுப் பேசின பிள்ளை, மோனமாக நாணத்துடன் என்னைப் பார்த்து இன்பப் புன்னகை பூத்தான்.

விவரிக்கவொண்ணாத ஓர் உணர்ச்சி, நன்றிபோல, உவகைபோல, பெருமை போல, இனிமை நிறைந்ததாய்ச் சுரந்தது என் இதயத்தில்.

ஆஹா இந்தச் சிறுவனை, அன்பனை, நான் மறந்துதானிருந்தேன், நினைத்ததில்லை. எப்படி மறந்தேன்?

இரண்டு வருஷங்களுக்கு முன்பு இதே பாலகன், "நீ எத்தனை காரியம் பண்ணறே!" என்று என்னைப் புகழ்ந்தான். இன்னொரு சமயம், "ஒன்னைப்பத்தி அம்மாவும், பாட்டியும் என்னவோ சொன்னா, மாமீ!" என்று அந்தப் பாட்டியின் எதிரிலேயே சொல்லிவிட்டான். "அந்தண்டே போடா நீ" என்று பாட்டி விரட்டினபொழுது, "எனக்கு இந்த மாமியை ரொம்ப பிடிச்சிருக்கு!" என்று பளிச்சென்று கூறிவிட்டான்.

அப்பொழுது நானிருந்த மனநிலையில், 'ஓஹோ, இவர்களின் குட்டு உடைபட்டது' என்றுதான் தோன்றிற்று. 'இந்தச் சிறுவனுக்கு என்னிடம் எத்தனை அன்பு!' என்று இப்பொழுதுதான் நினைவு வந்தது.

'ஏன் மறந்தேன் இத்தகையவனை?" என்று என் மனசு ரொம்பவும் அடித்துக் கொண்டது. இந்த அன்பனின் பரிசு அந்தக் காசு!

'மாமீ, பாரு மாமி; இந்தக் கொலுவிலே பெரிய சாயிபாபா பொம்மை இருக்கே, பார்த்தியா?' என்று கேட்டான் ரவி, உற்சாகமாக, மீண்டும் கொலு போட்டோவைப் புரட்டி.

'ஏண்டா மாமியைப் படுத்தறே!' என்றாள் கோமதி; எனக்கு சாயிபாபா விஷயம் ரசிக்காது என்ற தொனியில் எனக்கு கோமதியின் பேச்சு வேடிக்கையாகயிருந்தது. அவள் என்னைப்படுத்தி வைத்தபாடெல்லாம் அபிமானமோ?

நானும் ஏதாவது பேசிப் பேசித்தானே பொழுதுபோக்கித் தோழமையை ஊக்க வேண்டும்? 'கொலு எதற்காக வைக்கிறார்கள் தெரியுமோ? என்று கேட்டேன், கோமதியும் ரசித்துக் கேட்கக் கூடிய விளக்கம் ஒன்று சொல்ல என் ஆவல்!

'பொம்மையெல்லாம் அழகாய் இருக்குன்னுதானே!'. என்றான் ரவி. ஆண் பிள்ளையானாலும், பொம்மைகள் என்றால் மயங்கி மகிழும் குழந்தை அல்லவா?

'அதுமட்டுமில்லை, ஒரு பொல்லாத ராட்சசனைக் கொன்றுவிடணுமென்று ஒரு அம்மன் ராட்சசனுடன் சண்டை போட்டாள். ராட்சசன் ரொம்பக் கெட்டவன். அம்மனையே ரொம்பப்படுத்திவிட்டான். அதனாலே அம்மனுக்கு ஒத்தாசை செய்யணும்னு எல்லோரும் - தேவதைகள், தேவர்கள், சந்திரன், சூரியன், இந்திரன் எல்லோரும் ஒத்தாசை பண்ணினார்கள். நம்ம வீட்டிலிருக்கிற ஒவ்வொரு பொம்மையும் ஒரு தேவதை. ஒரே ஒரு பொம்மையை நாம் கொலு வைத்தால் கூட, 'ஒரு தேவதையாவது அம்மனுக்கு உதவி செய்ய இருக்கிறது நம்மாத்தில் என்று அர்த்தம்,' என்று ரவியிடம் சொல்லிக்கொண்டே இடையிடையே கோமதியையும் கவனித்தேன். அவளும் சற்று வியப்புடன்தான் கேட்டுக்கொண்டு வந்தாள். நான் நிறுத்திவிட்டதும், "ஜோராயிருக்கு மன்னி, நீ சொல்லுகிற வியாக்யானம்! என்ன இருந்தாலும் உன் யோசனையே அலாதி!" என்றாள்.

'இதில் என் யோசனை என்ன? கொலுவின் தத்துவம் இதுதான் என்று எனக்கு ஒரு சிநேகிதிதான் சொன்னாள். அவள் சொன்ன பிறகு நானும் வீட்டில் மேஜைமேல் ஐந்தாறு பொம்மைகளை கொலு வைக்கிறேன். சின்ன கொலு என்று வெட்கப்பட இடமேயில்லையே; நாம் அம்மனுக்குப் படை திரட்டிக் கொடுக்கிற கைங்கரியம்தானே; நானும் கொலு வைக்கிறேன்' என்றேன்.

'போட்டோ எடுத்தியா மாமி' என்று கேட்டான் ரவி. 'இருடா சித்தே,' என்று பிள்ளையை அடக்கிவிட்டு, கோமதி, "முன் காலத்தில் யுத்தம் வந்தால் வீட்டுக்கு ஒரு ஆளாகச் சேனையில் சேர வேண்டுமாமே; அதுபோல் ஒரு பொம்மையாவது ஒரு வீட்டில் கொலு வைக்கத்தான் வேணும்!" என்றாள் அழுத்தமாக.

என்ன வருத்தமோ, ரவிக்கு. 'என்னோட சாயிபாபாவே அந்த ராட்சசனைக் கொன்னூடுவாரே! அவருக்கு யாரும் ஒத்தாசை பண்ண வேண்டாம். அவரே ராட்சசனை ஒரு நிமிஷத்திலே கொன்னுடுவார்!' என்றான்.

அத்தகைய நம்பிக்கை இந்த ரவிக்கு இருக்கிறதென்றால்? - இதுவே பக்தி. 'ஆமாண்டா கண்ணு' என்று சிறுவனை அணைத்துக்கொண்டு அவனுக்கு அதிருப்தியுண்டாகாமல் நடந்து கொண்டேன்!

தன் பெயர் சாயிநாத் என்ற பெருமையில் தோன்றிய நம்பிக்கையா? சிறு பையனுக்கு இப்படி ஒரு பெருமை தோன்றினால், அது மமதையாக, கர்வமாக, பொல்லாத உருக்கொண்டுவிடக்கூடுமோ?

எப்படியிருந்தாலும் சரி, ரவியை நான் அந்தக் கணம் பார்த்த நோக்கில் எந்தக் கேள்வியும், ஐயமும் தோன்றவில்லை. அன்புதான் உண்டாயிற்று. சாயிபாபாவை ஒரு தேவதையாகக் கொள்ளாமல் தனது இஷ்ட தெய்வமாகவே வணங்கட்டும் ரவி.

கீதையில் கண்ணன் 'நானே எல்லாம்' என்று கூறுகிறார். 'நான் சிஷ்யன்' என்று சொல்கிறார், குரு என்ற ஸ்தானத்தில் இருந்துகொண்டு, 'நான்தான் புருஷோத்தமன், நானே செயல் புரிகிறேன்' என்று அறிவிக்கிறார். கண்ணபிரான் 'நான், நானே' என்று சொல்லுவதை யாராவது தவறாக நினைக்கிறோமா? இதென்ன தற்பெருமை என்று கருதுகிறோமா?

'ஆனா, பரவாயில்லை; நான்தானே சாயிநாத்?' என்று ரவி சொன்னான், காசு தொலைந்துபோனதாக வருத்தப்பட்டபொழுது, சாயி பக்தனாக இருந்து கொண்டு 'நானே சாயி?' என்று அவன் சொன்னதன் சுவைதான் என் சித்தைக்கு ருசித்தது.

'என் பெயர் சாயிநாத் ஆச்சே; என்னை நினைத்துக்கொள்ளும்படிக்கு மாமிக்கு சாயிபாபா காசு அனுப்பணும்! என்று ஆசைப்பட்டிருப்பானோ?

சின்னப் பிள்ளை பெரிதாய், பிரமாதமாய் ஏதும் நினைத்திருக்காவிடினும், அன்பு என்னும் பெரிய சக்தியினால் உந்தப்பட்டான் போலும்.

முன்னொரு தடவை கோமதி தன் பிள்ளை ரவியைக் கொஞ்சிக் குலவியபடி 'கேள்டா, மாமியை. எனக்கு ஒரு பெண்ணைப் பெத்துத் தா மாமீன்னு கேள்டா,' என்று கற்றுத் தந்தாள். பெண்தான் பிறந்தாள் எனக்கு. என்ன பயன்? போய்விட்டது, அது வாழ்ந்த வாழ்வுக்குள் என் அவசரம்! 'நாத்தனாராக இருந்து என்னைப் பதம் பார்த்தது போதும். என் பெண்ணின் மாமியாராக இருந்து அதையும் சோதனை செய்யணுமோ?' என்று கூட ஆத்திரப்பட்டேன். அத்தனை நம்பிக்கை இருந்தது என் மகளின் ஆயுளைப்பற்றி!

அந்த அருமைச் செல்வி போன பிறகு மனம் நெகிழ்ந்து, பார்வை கனிந்து, நான் கண்ணெடுத்துப் பார்க்கிறேன், இந்த ரவியைத்தான். விசாலமான மனப்பான்மையுடன் எல்லாக் குழந்தைகளையுமே என் குழந்தையாக நினைத்து அபிமானத்துடன் நோக்க நான் கற்றிருக்கவில்லை.

இப்பொழுதும்தான் என்ன? ரவியை நான் என்னுடன் அபிமானமாகப் பிணைத்துக் கொண்டேனா? அனுதாபமாகத் தான் என்னுடன் சேர்த்துக்கொண்டேன். என் மகள் உயிருடன் இருந்திருந்தால் அவளை கோமதியின் மருமகளாக அளித்திருக்கமாட்டேனா என்னமோ - அவளை இந்த ரவியின் மனைவியாக என் மனக் கண்முன் வைத்துப் பார்த்துவிட்டேன் இப்பொழுது. 'மகளை இழந்த நான், மனைவியை இழந்த ரவி' என்று ஒரு கற்பனையில் உறவும் அன்பும் இணைந்தன.

'மாமீ, என்னாட்டமா நீயும் இன்னிக்குச் சாதம் சாப்பிடாதே. பர்பி தின்னு' என்று ரவி மொழிந்ததும், கோமதி மைந்தனைக் கடிந்தாள். 'நன்னாயிருக்குடா உன் கட்டளை!' என்று.

'சாயிநாத் கட்டளை இடும்பொழுது நான் ஏற்கமாட்டேனா அக்கா?' என்று பகர்ந்தேன் நான். ஒரு சிறுவனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டிருக்கும் அருமையான அனுபவமும் இனிது இனிது!

***********

(சுதேசமித்திரன், அக்டோபர் 21, 1956)